ISSN 2454-3993

■ மலர் 3 ■ சிறப்பிதழ் 2 ■ பிப்ரவரி, 2019

# சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

JOURNAL WITH 3.085 IMPACT FACTOR SIJ TAMIL STUDIES

**மெடோனா பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
விரகனூர், மதுரை

**சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்**
மதுரை

இணைந்து நடத்தும்

**தொகுதி – 2**

பன்னாட்டுக் கருத்தரங்கம்




08.02.2019

**பதிப்பாசிரியர்கள்**
திருமதி. சே.சலோமி இராஜரீகம்
அருள்சகோதரி முனைவர் திரவிய ரெஜினா ராஜம்
முனைவர் அ.செபாஸ்டின் மகிமைராஜ்
முனைவர் சி.அருள் மைக்கேல் செல்வி
முனைவர் இரா.ஏஞ்சல்
முனைவர் கோ.கருணாகரன்
முனைவர் செ.அன்புராணி
திருமதி. ஜோ.சகாய பவுலின்

UGC Approved Journal Number: 40729
VOLUME 3 | SPECIAL ISSUE 2 | FEBRUARY 2019

## Shanlax International Journal of Tamil Studies

A Peer-Reviewed-Refereed Scholarly Quarterly Journal Globally Indexed with Impact Factor

ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE
PKP PUBLIC KNOWLEDGE PROJECT
OJS OPEN JOURNAL SYSTEMS
SHANLAX INTERNATIONAL JOURNALS

# சமுதாயத்தில் பெண்களின் பன்முகத்தன்மைகளும் மேம்பாடுகளும்

(பன்னாட்டுக் கருத்தரங்கம்)

| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | திருமதி.சே.சலோமி இராஜரீகம்<br>முனைவர் சி.அருள் மைக்கேல் செல்வி<br>முனைவர் அ.செபாஸ்டின் மகிமை ராஜ்<br>முனைவர் இரா.ஏஞ்சல்<br>முனைவர் கோ.கருணாகரன்<br>முனைவர் செ.அன்புராணி<br>திருமதி ஜோ.சகாய பவுலின் |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | பிப்ரவரி, 2019 |
| வெளியீடு | : | மெடோனா பெண்கள் கலை மற்றும்<br>அறிவியல் கல்லூரி<br>விரகனூர், மதுரை - 625 009. |
| கணினி அச்சாக்கம் | : | சான்லாக்ஸ் பிரஸ் |
| பக்கங்கள் | : | 179 |

**ISSN : 2454 - 3993 (UGC Approval Number: 40729)**

பன்னாட்டுக் கருத்தரங்கம் **சமுதாயத்தில் பெண்களின் பன்முகத்தன்மைகளும் மேம்பாடுகளும்**

# இலக்கியத்தில் பெண்கள் மேம்பாடு

## டே.சோபியா அன்புச் செல்வி

தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர், புனித அந்தோணியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தாமரைப்பாடி

மலர்: 3

சிறப்பிதழ்: 2

மாதம்: பிப்ரவரி

வருடம்: 2019

ISSN: 2454-3993

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய பதினெட்டு நூல்களையும் மேற்கணக்கு நூல்கள் என்றும் சங்க இலக்கியங்கள் என்றும் கூறுவர். பண்டைத் தமிழர்களைப் பற்றியும் அவர்தம் வாழ்க்கை முறைகளைப் பற்றியும் பண்பாட்டைப் பற்றியும் உணர இவ்விலக்கியங்களைத் தவிர வேறு சரியான சான்றுகள் இல்லை. அச்சம், மடம், பயிர்ப்பு, நாணம் எனும் நான்கு குணங்களும் நான்கு படைகளாக ஒவ்வொரு பெண்ணிற்கும் உறுதுணையாக அமைந்துள்ளன. வீரமும் காதலும் இரு கண்களாகக் கருதப்பட்டு, போற்றப்பட்டு பாடுபொருளாக்கப்பட்டு எழுந்த வீரயுகப் பாடல்கள் சங்க இலக்கியத்தின் வழிநின்று இக்கட்டுரையில் காணலாம்.

**மகளிர் அழகு**

நீர் போன்ற சாயலும், மயில் போன்ற இயலும் நறுமை தன்மை, மென்மையாகிய இயல்பு வாய்ந்த மேனியும், இயற்கை மணமும் உடையவர்களாக மகளிர் விளங்கினர். பூப்போன்ற கண்களும், மூங்கில் போன்ற திரண்ட தோள்களும், பிறை போன்ற மதியை மயக்கும் நெற்றியும் உடையவராய் மகளிர் திகழ்கின்றனர். ஐந்து வகையாகப் பிரித்துப் பின்னிய நறுமணம் கமலும் கூந்தல், மானையும் வெல்லும் மருட்டு நிறைந்த பார்வை, மயிலின் சாயல் எல்லாம் உடையவள் மகளிர்.

**புராணப் பெண்டிர்**

கணவன் உயிரை மீட்டாற்பொருட்டு இமயனுடன் வாதிட்டு தன் கற்பு வலிமையால், சொல் சாதுரியத்தால் வென்ற சாவித்திரி, கணவனது விருப்பத்திற்கிணங்க அவனைக் கூடையில் சுமந்து பரத்தை வீட்டிற்குச் சென்றாள். கணவனின் உயிரை மீட்டாற் பொருட்டு சூரியோதயத்தையே தடுத்து நிறுத்திய நாளாயினி, அத்தி போல் விருந்துக்கு வந்த கடவுளரைத் தன் கற்பு வல்லமையால் கைக்குழந்தையாக்கி ஆடையின்றி உணவு பரிமாறிய அனுசுயை, கற்பிற் சிறந்த அருந்ததி போன்ற புராணப் பெண்கள் போற்றுதற்குரிய தெய்வீகக் குணத்தை உடையவர்கள்.

**பெண்ணை முன்னிறுத்தி விளித்தல்**

கொற்றவை மகனே, காடுகிழாளின் மகனே, மலை மகளாம் உடையவளின் மகனே, சிவனின் புதல்வனே, அருந்ததி ஒழிந்த அறுவரால் பெறப்பட்டவனே என்று முருகன் போற்றப்படுகிறார்.

**'ஒரு முகம்**
**குறவர் மடமகள், கொடிபோல் நுசுப்பின்**
**மடவரல் வள்ளியோடு நகை அமர்ந்தன்றே'**

என்று பெண்ணை முன்னிறுத்தி முருகன் போற்றப்படுகிறார்.

**பரிசில் நாடும் பெண்டிர்**

பெண் மயிலைப் போன்ற பாடினி, சாதிலிங்கத்தை உருக்கி வார்த்தாற் போன்ற செந்நிலத்தை நடத்து அவள் கால்களில் கொப்புளங்கள் தோன்றின. முரல் பழத்தைப் போன்ற கொப்புளங்களால் அவள் நடக்க முடியாமல் நின்று விட்டாள். இலையுதிர்ந்த ஒரு மரத்தின் அடியில் உட்கார்ந்த அவள், காடுறை தெய்வத்தை வணங்கி பிறகு பாடத் தொடங்கினாள் என்று கூறும் பகுதியில் பெண்களும் வள்ளல்களிடம் பரிசு பெறச் சென்ற செய்தியை,

**'வருந்து நாய் நாவின் பெருந்தகு சீறடி**
**அரக்கு உருக்கன்ன செந்நிலன் ஒதுங்கலின்**
**பரற் பகையுழந்த நோயொடு சிவணி**
**மரல் பழுத்து அன்ன மருகுநீர் மொக்குள்**
**நண்பகல் அந்தி நடையிடை விலங்கின்**
**பெடை மயில் உருவின் பெருந்தகு பாடினி'**

என்ற பொருணராற்றுப்படை பாடல் மூலம் அறியமுடிகிறது.

**அரண்மனைப் பணிமகளிர்**

**'இழையான் வளப்பின் இன்கை மகளிர்**
**போக்கு இல் பொலங்கலம் நிறையப் பல்கால்**
**வாக்குபு தரத்தர வருத்தம் வீட**
**ஆர உண்டு பேரஞர் போக்கி'**

என்று அரசனது அரண்மனையில், நல்ல நகைகளை அணிந்த மகளிர் இனிமை தரும் புன்சிரிப்புடன் விளங்கும் மகளிர், ஒளி கெடாத பொற் கிண்ணத்திலே பல தடவை மதுவை நிரப்ப பற்றித் தருவார்கள். அவர்கள் கொடுக்க கொடுக்க பாணர்களும் பாடினிக்கும் வாங்கி வழி நடந்து போன வருத்தம் தீர உண்ட செய்தி கூறப்படுகிறது. விருந்து உபசரித்தல் பெண்டிர் பண்பாக இருந்தது.

**இசைப் புலமைத்திறம்**

இசைக் கலைஞர்களாகிய பெண்கள் பாடினி, பாணினி, விறலி என்று அழைக்கப்படுகின்றனர். இசைத் துறையைச் சார்ந்த இப்பெண்களைப் பற்றி பாதாதிகேச வர்ணனை, கேசாதி பாத வர்ணனையைக் காண முடிகிறது. இயல்பிலேயே மென்மைத் தன்மை வாய்ந்த மகளிர் இசைக்கலையில் சிறந்து விளங்கினர். அவர்கள் குரல் இனிமை நிறைந்ததாக இருந்தது. தாலாட்டுப் பாட்டு பாடியே வழி வழி இசையை வளர்த்த மரபினர் மகளிர் ஆவர். யானை முதலிய காட்டு விலங்குகளும் கூட அவர்தம் இசைக்கு தட்டுப்பட்டனர்.

**'ஒலியல் வார்மயிர் உளரினங் கொடிச்சி**
**பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக்**
**குரலுங் கொள்ளாது நிலையிலும் பெயராது**
**படாஅப் பைங்கண் பாடுபொற் றொய்யென**
**மறம்பசல் மழகளிறு உறங்கும்'**

என்பதன் மூலம் மகளிர் தம் இசைத்திறனை அறியலாம்.

**உமட்டியர்**

**'நோன் பகட்டு உமணர் ஒழுகையொடு வந்த**
**மகாகர் அன்ன மந்தி மடவோர்**
**நகரகர் அன்ன நளிநீர் முத்தம்**
**வாள்வாய் எருத்தின் வயிற்றகத் தடக்கித்**
**தோற்புறம் மறைக்கும் நல்கூர் நுசப்பின்**
**உளரியல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற**
**கிளர்பூண் புதல்வரொடு கிலுகிலியாடும்'**

என்ற சிறுபாணாற்றுப்படை பாடல் மூலம் உப்பு வணிகர்கள் வண்டியிலே உப்பை ஏற்றிக் கொண்டு வியாபாரத்திற்குச் செல்லும்போது உமட்டியர்கள் உமணருடன் செல்வதை அறியலாம்.

**மானவுணர்வு**

கிணை வாசிப்பவனின் மனைவி பசியால் வருந்தி வாடுகிறாள். அவள் வீட்டிலே உணவு சமைப்பதற்கு ஒரு பண்டமும் இல்லை. குப்பையிலே பயிரான வேளைக் கீரையைக் கூர்மையான நகத்தினால் கிள்ளியெடுத்தாள். உப்பில்லாமல் வேக வைத்தார். அறிந்தவர்கள் எவரேனும் பார்த்தால் பரிகசிப்பார்களே என்று நாணமடைந்தாள். ஆதலால் வாயிற் கதவைச் சாத்தி தாழிட்டுக் கொண்டாள். இவ்வாறு ஒரு ஏழைக்குடும்பத்தின் தலைவி வறுமையிலும் தன்மான உணர்வுடன் விளங்குகிறாள்.

**'ஓங்கு பசியிழந்த ஒடுங்கு நுண்மருங்குல்**
**வளைக்கைக் கிணைமகள், வள்ளுகிர்க் குறைந்த**
**குப்பை வேளை உப்பிலி வெந்ததை**
**மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து**
**இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் மிசையும்'**

விருந்து உபசரித்தல்

வேடர்குலப் பெண்கள் புளிக்கறி செய்வார்கள். சோறும் சமைப்பார்கள். வேட்டையாடிக் கொண்டு வந்த ஆமான் முதலியவற்றை சமைப்பார்கள். இவற்றையே விருந்தினர்க்கும் இட்டு உபசரிப்பார்கள்.

**'எயிற்றியர் சுட்ட இன்புளி வெஞ்சோறு**
**தேமா மேனிச் சில்வளை ஆயமொடு**
**ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவிர்**
**இரும்தாழ் உலக்கை இரும்புமுகம் தேய்த்த**
**அவைப்பு மாண் அரிசி அமலை வெண்சோறு**
**சுவைத்தாள் அலவன் கலவையோடு பெறுகுவீர்'**

உழவர்குலப் பெண்கள் கைக்குத்தல் அரிசியால் சோறாக்குவார்கள். வயல்களிலே பிடித்த நண்டையும், கொல்லையிலே காய்த்த பீர்க்கங்காயையும் சேர்த்து சமைப்பார்கள். தாமும் உண்பார்கள். விருந்தினருக்கும் இடுவர் என்பதன் மூலம் அடுக்களைப் பணி, எல்லாத் தரத்து மக்களிடத்தும், மகளிரையே சார்ந்திருந்தது. விருந்து உபசரித்தலைப் பெண்கள் தம் கடமையாகக் கருதினார்கள்.

அருந்ததியைப் போன்ற கற்புடைய பார்ப்பனப் பெண்கள் பால் சோறு, பருப்பு சோறு, இராஜன்னம் என்ற நெற்சோறு முதலியனவற்றை சமைப்பார்கள். மாதுளம் பிஞ்சைப் பிளந்து, மிளகுப் பொடியும் கறிவேப்பிலையையும் கலந்து பசு வெண்ணெய்யில் வேக வைத்து பொரியல் செய்வார்கள். வடுமாங்காய், தயிர்சாதம், மாங்காய் சாதம், புளியஞ்சாதம் போன்ற பலவகையான சித்தரான்களும் சமைப்பார்கள். இதன் மூலம் இல்லப்பணியில் பெண்கள் சிறந்து விளங்கினார்கள்.

**வீரப்பண்பு**

வீரம் நிறைந்த ஆடவரையே இளமகளிர் விரும்பினர். மறக்குடி மகளிரின் வீரத்தினர் 'மூதின்முல்லை' என்று புறப்பொருள் இலக்கணம் கூறும். மறக்குடி மகளிரை மூதின் மகளிர் என அழைத்தனர். மறக்குடியில் பிறந்த பெண்ணொருத்தி முதல் நாட்போரில் தன் தமையனும், மறுநாள் போரில் தன் கணவனும் மடிந்த நிலையிலும் தன் குடிக்கு ஒருவனாய் எஞ்சி நிற்கும் தன் இளம் பருவத்து மகனை அழைத்து அவன் கையில் வேலினைக் கொடுத்து வெள்நடை அணிந்து, தலைமுடியினை எண்ணெய் பூசி வாரி முடித்து செருமுகம் நோக்கி செல்க என விடுத்ததாகப் புறப்பாடல் கூறுகின்றது.

**'கெடுக சிந்தை கடிதிவள் துணிவே**
**மூதின் மகளி ராதல் தகுமே**
**மேனாள் உற்ற செருவிற்கிவள் தன்னை**
**யானை யெறிந்து களத்தொழிற் தனனே**
**நெருநல் உற்ற செருவிற் கிவள் கொழுநன்**
**பெருநிரை விலக்கி யாண்டுப்பட் டனனே**
**இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி**
**வேலைக் கொடுத்து வெளி துவிரித் துஉஇப்**
**பாறுமயிர்க் இடுமி யெண்ணெய் நீவி**
**ஒரு மகன் அல்லது இல்லோர்**
**செருமுக நோக்கிச் செல்கென கெடுமே'**

மறக்குடி மகளிருக்கும் வீரம் மிகுந்து இருந்தது என்பதை அறியலாம்.

**பாசறை மகளிர்**

பெண்கள் பாசறைக்குச் செல்லும் வழக்கம் பண்டைக் காலத்தில் இருந்தன. சிறிய வளையல்களை அணிந்திருந்தனர். அவர்கள் தலைமுடி அவிழ்ந்து முதுகிலே கிடந்தது. இரவை பகலாக்கும் ஒளி பொருந்திய வளையை இடுப்பிலே அணிந்திருந்தனர். இத்தகைய வீரப்பெண்கள் எண்ணெய் சிந்துகின்ற குழாய் வடிவமான நீண்ட பந்தத்தைக் கொளுத்திக் கொண்டு பாசறைக்குள் திரிகின்றனர்.

**'குறுதொடி முன்கைக் கூந்தல் அம்சிறு புறத்து**
**இரவு பகல் செய்யும் திண்டாடி ஒள்வாள்**
**விரவு வரிக்கச்சின் பூண்ட மங்கையர்**
**நெய்யுமிழ் சுரையர், நெடுந்திரிக கொளீஇக்**
**கையமை விளக்கம் நந்துதொறும் மாட்ட'**

அரசனின் அந்தரங்கக் காப்பாளராகப் பெண் உடைவாளுடன் பணிபுரிந்தனர். அவர்கள் மிலேச்சர் என்று அழைக்கப்பட்டனர்.

**திருமண முறை**

எட்டுவகையான திருமண முறைகள் சமூகத்தில் வழக்கில் இருந்தது. அவற்றுள் ஆணும் பெண்ணும் எதிர்பட்டுக் காதல் கொண்டு இணையும் காந்தர்வ மணமுறை தவிர பிற ஏழுவகை மணங்களும் பெரும்பாலும் ஆண்-பெண் இருபாலரின் விருப்பத்தின் பேரில் மேற்கொள்ளப்பட்ட மணங்களாக தோன்றவில்லை. பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தர்வம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்பன எண்வகை மணமுறைகள் இருந்தது. இத்தகைய மண முறைகளை இலக்கியத்தில் பின்பற்றி வந்தனர்.

**நிறைவாக**

இலக்கியத்தில் பெண்கள் நிலை சிறப்பாகக் கூறப்படுகிறது. வீட்டிற்கு ஒளி தருவது பெண்கள். அவர்களுக்கு ஒளி தருவது அவர்களின் மக்களே. பெண்கள் வீட்டிற்கும் சமுதாயத்திற்கும் பாடுபட்டுள்ளனர்.

**'பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா!**
**பெண்மை வெல்கவென்று கூத்திடுவோமடா!'**

என்ற பாரதியின் பாடல் வரிகளுக்கு ஏற்ப பெண்மையைப் போற்றிடுவோம். இலக்கியப் பெண்ணின் கற்பு, நாணம், அடக்கம், கல்வி முதலிய குணங்களை நம் தலைமுறைகள் பின்பற்ற வழிகாட்டுவோம்.